பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5.00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 09 செவ்வாய்க்கிழமை (25 08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 271

## 3 நாள் ராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த

# 20 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்புற்ற நிலையில்!

### உணவு, சுகாதார வசதிகள் இன்றி தவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 25

வலி. வடக்கு, வலி. மேற்குப் பகுதிகளில், கடந்த வாரம் மூன்று நாட்கள் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இருபதாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 45 முகாம்களில் தங்கியுள்ள இந்த அகதிகள் போதிய உணவு மற்றும் சுகாதார வசதியின்றி அவதியுறுகின்றனர்.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்த விவரம் வெளியிடப்பட்டது. இக் கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது.

சங்கானைப் உதவி அரச அதிபர் பகுதியில் 14 முகாம்களில் ஆயிரத்து 195 குடும்பங்களும் —

சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பகுதியில் 17 முகாம்

[2 ஆம் பக்கம் பார்க்க]

### நேற்றுவரையான புள்ளி விவரம்:

## படையிடம் சிக்கியோர்: 150
## காணாமற் போனோர்: 84

யாழ்ப்பாணம், ஆக. 25

வலி — வடக்கு மற்றும் சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் 150 பேர் படையினரிடம் சிக்கியுள்ளதாக செஞ்சிலுவைச் சங்கத்தில் அவர்களது உறவினர்கள் நேற்று வரை பதிவு செய்துள்ளனர்.

சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட மாதகல், இளவாலைக் கிராமங்களில் 130 பேரும், வலி-வடக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட அளவெட்டி, பன்னாலைக் கிராமங்களில் 20 பேரும் சிக்கியுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த வார இராணுவ நடவடிக்கைகளின் போது 84 பேர் காணாமற் போயுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தில் காணாமற் போனோர் செய்த பதிவுகளின் — முறைப்பாடுகளின் — பிரகாரம் 74 பேர் வயதானவர்கள் என்றும் 5 பேர் இளம் வயதினர் என்றும், 5 பேர் குழந்தைகள் என்றும் தெரிய வருகிறது.

காணாமற் போனவர்கள் குறித்து தொடர்ந்து பதிவுகள் நடைபெறுவதாகவும் எண்ணிக்கை மேலும் உயரலாம் என்றும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-5-162)

---

**பல்கலை அனுமதி**

மீளாய்வு செய்யப்பட்ட வெட்டுப்புள்ளி விவரம்

5 ஆம் பக்கத்தில்

---

### வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 25

அலம்பிலில் நேற்று இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களான கப்டன் அன்பரசன் அல்லது அர்ச்சர் [குச்செல்வம் ரவிக்குமார்], 2ஆம் லெப்டினன்ட் சுடர் [கந்தசாமி ஜெகதீஸ்வரன்] ஆகியோரே வீரமரணமடைந்தவர்களாவர். (உ-3)

★ ★ ★

கடந்த 21ஆம் திகதியன்று மட்டக்களப்பு களுவங்கேணியில் இராணுவத்தினர் நடத்திய சுற்றிவளைப்பின்போது இடம்பெற்ற தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளியான பாலகுமார் அல்லது உதயன் [அருளப்பு செல்வராசா - ஏறாவூர்] வீரமரணமடைந்தார்.

★ ★ ★

வல்வெட்டித்துறைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை

[2 ஆம் பக்கம் பார்க்க]

### ஆனையிறவில் ஷெல் வீச்சு

தென்மராட்சி, ஆக 25

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒன்பது மணியளவில் ஆனையிறவு கறுக்காய் வெளி பகுதியிலிருந்து படையினர் கடும் ஷெல் வீச்சும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர். (அ-117)

### திருமலையில் படையினர் சூடு! 2 தமிழர் பலி!!

யாழ்ப்பாணம், ஆக. 25

திருகோணமலை பொன்னங்கேணி என்ற இடத்தில் கடந்த வெள்ளியன்று ராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் இரு தமிழர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார். மேலும் இரு தமிழர் காணாமல் போயினர்:

சேனையூரைச் சேர்ந்த சாமித்தம்பி சில்வராசா, செல்வராசா ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். [உ-3]

### "பூமியதிர்ச்சி" முடிந்தது:

## அடுத்த நடவடிக்கைக்கு படையினர் தயாராம்!

'ஒப்பரேசன் பூமியதிர்ச்சி' நடவடிக்கை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அடுத்த நடவடிக்கைக்கு படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன பலாலி படைமுகாமில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்.

பூமியதிர்ச்சி இராணுவ நடவடிக்கையில் ரி 55 ரக டாங்கிகள் சகிதம் ஐந்து படையணிகள் பங்குபற்றின.

பூமியதிர்ச்சி நடவடிக்கையின் முதற் கட்டத்தில் இளவாலையும் இரண்டாவது கட்டத்தில் மாதகலும் விடுவிக்கப்பட்டன. —

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இராணுவத் தளபதியின் பேட்டியின் ஒரு பகுதி 3 ஆம் பக்கத்திலும்) [உ-10]

### ★ காவலரண்கள் மீது தாக்கு:

## அலம்பிலில் நேற்று 4 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 25

அலம்பில் பகுதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் நான்கின் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின் போது நான்கிற்கு அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

சுமார் 15 நிமிட நேரம் இத்தாக்குதல் நீடித்தது.

இந்த தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அக்காவலரண்களை நோக்கி அருகில் உள்ள இராணுவ முகாமில் இருந்த இராணுவத்தினர் முன்னேறி, தாக்குதலில் அகப்பட்டுக் கொண்ட இராணுவத்தினருக்கு உதவ முற்பட்டனர்: அவர்கள் மீதும் விடுதலைப்

[2 ஆம் பக்கம் பார்க்க]

### அலம்பில் தாக்குதலில் கைப்பற்றப்பட்டவை

அலம்பில் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

★ ஏ. கே. எல். எம் ஜி துப்பாக்கி — 1
★ அதற்குரிய ரம் மகஸின் — 1
★ அதற்குரிய ரவை — 100
★ ரி 56 ரகத் துப்பாக்கி — 3
★ அதற்குரிய மகஸின் — 7
★ நடுத்தர ரவைகள் — 2 480
★ 40 மி. மீ. ஷெல்கள் — 3
★ ரி 81 ரகத்துப்பாக்கி கிரனேட் — 1
★ ஜே. ஆர். கைக்குண்டு — 1
★ புகைக்கூண்டுகள் — 3
★ படப்பிடிப்பு கருவி — 1
★ ஏ. கே. ஹோல்ஸர் — 3

மற்றும் சில தளபாடங்கள் ஆகியன.

(உ-3)

## பலாலி செல்ல மறுத்தோரை அறையில் பூட்டி இம்சிப்பு!

### திரும்பி வந்தவர்கள் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 25

அளவெட்டி வடக்கு, மாதகல் பகுதிகளில் இராணுவத்தினரிடம் சிக்கியவர்களை பலாலிக்கு வருமாறு படையினர் வற்புறுத்தினர்.

அவ்வாறு செல்ல மறுத்தவர்களை இரண்டு நாட்களாக அறைக்குள் பூட்டி வைத்து உணவு எதுவும் கொடுக்காமல் இம்சித்தனர்.

படையினரிடம் சிக்குண்டு தப்பி வந்தவர்களில் ஒருவர் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை தம்மிடம் சிக்கியவர்கள் வசம் இருந்த நகைகளை நிர்ப்பந்தப்படுத்திப் படையினர் வாங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

படையினரிடம் இருந்து மீண்டுவந்த ஒரு பெண்ணுக்குத் தோளில் காயம் காணப்பட்டது. படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் தமக்கு அந்தக் காயம் ஏற்பட்டதாக அந்தப் பெண்மணி உதயனுக்குத் தெரிவித்தார்.

இராணுவத்திடம் சிக்குண்டவர்களில் பெரும்பாலானோர் முதியவர்களும் நோயாளர்களுமே என்று மீண்டு வந்தவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அளவெட்டி வடக்கு, மாதகல் பகுதிகளில் அகப்பட்ட பலரே மீண்டு வந்துள்ளனர். இவர்களில் ஒரு சிலரை மட்டுமே இராணுவத்தினர் அங்கு [illegible] (அ-3-18-163)

## படையினரின் வாகனம் கண்ணியில் சிதறியது!

### திருமலை மாவட்டத்தில் சம்பவம்

கொழும்பு, ஆக. 25

திருகோணமலை மாவட்டத்தில் கல்லாறு - மகிலாறு பகுதியில் நேற்று ரோந்து சென்று கொண்டிருந்த படையினரின் வாகனம் நிலக்கண்ணியில் சிக்கிச் சிதறியதில் அந்த வாகனத்தில் பயணம் செய்த அதிகாரி ஒருவர் உட்பட ஐந்து படையினர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்புச் செய்திகளை ஆதாரம் காட்டி வெரிதாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுப் பரீட்சைகள் நாளையும் மறுதினமும்!

யாழ்ப்பாணம், ஆக 25

திட்டமிட்டபடி ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை நாளையும், கிராம சேவையாளர் தெரிவுப் பரீட்சை நாளை மறுதினமும் யாழ். குடாநாட்டில் நடைபெறும்.

ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை யாழ். நகரத்துக்குள் அமைக்கப்பட்டிருக்கும் 21 பரீட்சை நிலையங்களில் மட்டும் நடைபெறும்.

நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் கிராம சேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் இடம்பெயர்ந்தவர்களும் தோற்ற கல்வி அலுவலகம் விசேட வசதி செய்துள்ளது.

இடம்பெயர்ந்த பரீட்சார்த்திகள், தமது அனுமதி அட்டை தொலைந்திருந்தால், தாம் தோற்றும் பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளரிடம் தமது கட்டிலக்கத்தை பெற்று, கல்வி அலுவலகத்தில் சமர்ப்பித்து தற்காலிக அனுமதி அட்டையைப் பெறலாம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கே. கணேஸ்வரன்

எமது பணிமனையில் கடமைபுரிந்த அமரர் கே. கணேஸ்வரன் 20-08-92 இல் அகால மரணமானார். இவரின் அகால மரணம் பற்றிய செய்தியைக் காலம் தாழ்த்தியே அறிந்தோம். அன்னாரின் பிரிவுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டு அவரது குடுபத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை மின்சார சபை,
வட்டுக்கோட்டை, வேலணை.
மின் அத்தியட்சகர், ஊழியர்கள்.

[22296]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## கந்தையா சபாரத்தினம்

(இளைப்பாறிய உள்ளூராட்சி மன்ற லிகிதர் - சுழிபுரம்)

அன்னாரது அந்தியேட்டி 23-08 92 (ஞாயிற்றுக் கிழமை) கொழும்பு முகத்துவாரத்தில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியம் 25-08-92 (இன்று) செவ்வாய்க் கிழமை வெள்ளவத்தையில் நடைபெறும்.

சித்தங்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா, இராஜேஸ்வரி அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருணாசலம் - பாலாம்பிகை (சித்தன்கேணி) அவர்களின் அன்பு மருமகனுமாகிய கந்தையா சபாரத்தினம் சென்ற 26-07-92 கொழும்பில் காலமானார்.


அன்னார் கோமதியின் அன்புக் கணவரும், சுவர்ணலதா, திலீபன், ராதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினேஸ்வரி கந்தசாமி, ஞானேஸ்வரி கணபதிப்பிள்ளை, ஜெகதீஸ்வரி சச்சிதானந்தம்பிள்ளை, தயாளந்தேஸ்வரி பாலசூரியகுமார், விஜயரத்தினம், சிவபாதரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரந்தாமன், சிவபாதசுந்தரம், இராமநாதன், செல்வராணி செல்லப்பா, தேவராஜா. வேலுப்பிள்ளை. தெட்சணாமூர்த்தி, சிவனடியான், துரைரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் கொழும்பு கனத்தையில் 29-07-92 புதன்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சித்தன்கேணி. திருமதி க. இராஜேஸ்வரி (தாயார்)

[22295]

# 17 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
1927—03—19



உதிர்வு:
1992—08—09

## அமரர் சோமசுந்தரம் ஐயாத்துரை

அன்பின் சிகரமே பண்பின் இருப்பிடமே
இல்லத்தின் ஒளிவிளக்கே உற்றார்க்கு உறைவிடமே
காலன் அவன் கவர்ந்து நாள் 17 கழிந்ததப்பா
கனவு போல் நீர் மறைந்தீரோ — உங்கள்
நினைவோ இன்றும் எம்மை வாட்டுதப்பா

எப்போதும் தங்கள் ஆன்மா சாந்தியடைந்து பேரின்ப பெருவாழ்வு பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் நினைவில் வாடும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

புது செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

[22294]

வலி-மேற்கு, வலி-தென் மேற்கிலிருந்து

# இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு விநியோகம்

அராலி, ஆக. 25

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக, மாதகல், சில்லாலை, பண்டத்தரிப்பு, காட்டுப்புலம், திருவடிநிலை அராலி, தொட்டைக்காடு ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் ஆயிரத்து 200 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மக்கள் வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

17 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆரம்பத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் உணவு விநியோகிக்கப்பட்டது. பின்னர் உதவி அரசாங்க அதிபர் உணவு விநியோகத்தை பொறுப்பேற்றுள்ளார்.

காலை உணவாக முகாம் மக்களுக்கு பாண் வழங்கப்படுகின்றது வலி. மேற்கு பேக்கரி உரிமையாளர்கள் இதனை வழங்குகின்றனர்.

முகாம்களின் சுகாதார தேவைகளை போருட் நிறுவனம் கவனித்து வருகின்றது.

(த-12)

# இடம் பெயர்ந்தோருக்கு உதவ உடனடியாக ரூ. 20 லட்சம் தேவை

## அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 25

கடந்த 20 ஆம், 21 ஆம் திகதிகளில் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்த விவரமான அறிக்கை ஒன்றை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு அனுப்பியுள்ளார்.

இந்த நடவடிக்கையால் இடம் பெயர்ந்த 15 ஆயிரம் குடும்பங்களுக்கும் இருப்பிட வசதி, சுகாதார வசதிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும்—

அவற்றுக்கு 20 லட்சம் ரூபா தேவை என்றும்—

அந்தப் பணத்தை உடனடியாகத் தருமாறும்— அரச அதிபர் கேட்டுள்ளார்.

இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்தவர்களுக்கு ஒருவார உலர் உணவு வழங்கப்படுவதாகவும்—

மேலும் தொடர்ந்து வழங்க அனுமதி தருமாறும்— அரச அதிபர், அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் கேட்டுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகம் ஊடாக இந்தக் கோரிக்கை நேற்று கொழும்புக்கு அனுப்பப்பட்டது. [அ-3-5]

## உற்சவம்

கொழும்புத்துறை கிழக்கு மணலியம்பதி ஸ்ரீ அம்மன்— ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று காலை விசேட சங்காபிஷேகத்துடன் முடிவடையும்.

## மற்றொருவர் கைது

'அத்த' பத்திரிகையின் கேலிச்சித்திரக்காரான ஜிப்றி ஜூனூஸ் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக பொரளைப் பொலீஸார் இன்னொரு சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே.

## 3 முஸ்லிம்கள் பலி

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

# அகதிகளால் மானிப்பாய் நிரம்பி வழிகின்றது

## பாடசாலைகள், கோயில்களில் தஞ்சம்

மானிப்பாய், ஆக. 25

வலி - வடக்கு, வலி - மேற்கு பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களால் மானிப்பாய்ப் பாடசாலைகள் நிரம்பி வழிகின்றன. மானிப்பாய், நவாலி கொத்தணிகளைச் சேர்ந்த 19 பாடசாலைகளிலும் அகதிகள் தங்கியுள்ளனர்.

அதே போல மானிப்பாய்ப் பகுதியில் உள்ள சைவ ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் பலவற்றிலும் அகதிகள் தங்கியுள்ளனர்.

சித்தன்கேணிப் பகுதியில்— பிள்ளையார் கோயில், சிவன் கோயில், ஆகிய இடங்களிலும்.

சங்கானைப் பகுதியில் — சிவப்பிரகாச வித்தியாசாலை, கலாசார மண்டபம், துறட்டிப்பனை அம்மன் கோயில் ஆகிய இடங்களிலும் அகதிகள் தஞ்சம் கோரியுள்ளனர்.

இதற்கிடையில் —

பண்டத்தரிப்பு (காடாப்புலம்) அரசினர் வைத்தியசாலை ஊழியர்களை மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் கடமைக்குச் செல்லுமாறு சுகாதார சேவைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-90-142)

## பண்டத்தரிப்பு, அளவெட்டி

# ப. நோ. கூ. சங்கங்களிலிருந்து உணவுப் பொருட்கள் மீட்பு

பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தில் இருந்த உணவுப் பொருள்கள் பாதுகாப்பாக வேறு இடத்துக்கு அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ப. நோ. கூ. சங்கத்தினரும், யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியினரும் எடுத்த முயற்சியால் பொருள்கள் பாதுகாப்பாக வேறிடத்துக்கு மாற்றப்பட்டன.

8 ஆயிரம் கிலோ அரிசி. 2 ஆயிரத்து 800 கிலோ சீனி, 4 ஆயிரம் கிலோ மா மற்றும் 5 ஆயிரம் கிலோ பருப்பு வகைகள் உட்பட மற்றும் சில பொருள்கள் மீட்கப்பட்டன.

இதேவேளை —

அளவெட்டி ப. நோ. கூ. சங்கத்திலிருந்தும் பொருள்கள் வேறிடத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. (அ-5)

## 20 ஆயிரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் 3 ஆயிரத்து 253 குடும்பங்களும்—

உடுவில் உதவி அரச அதிபர் 10 முகாம்களில் ஆயிரத்து 162 குடும்பங்களும்—

கோப்பாய் உதவி அரச அதிபர் பகுதியில் 4 முகாம்களில் 235 குடும்பங்களும் தற்சமயம் தங்கியுள்ளன.

அவர்களின் குடிதண்ணீர் மலசல கூட வசதிகள் மோசமான நிலையில் இருப்பதாகவும், அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவையை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

[அ-5]

## வீரமரணம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற வெடிவிபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் போராளியான நக்கீரன் (சங்கரலிங்கம் செந்தில்குமரன் - நாவற்குழி) வீரமரணமடைந்தார். (உ-3)

## அலம்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அலம்பில் பிரதான முகாமில் இருந்து சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த பகுதியை நோக்கி பரவலான மோட்டார் குண்டுத் தாக்குதலும், பீரங்கி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன.

அரசாங்க அறிவித்தல்

சுகாதாரத் திணைக்களம்

# குடும்ப நல சேவையாளருக்கான பயிற்சி நெறி

கடந்த யூன் மாதம் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற குடும்ப நல சேவையாளருக்கான முதலாம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி 2 ஆம் ஆண்டு பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது.

எனவே 1 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியை அவரது காரியாலயத்தில் காலை 8. 30 மணிக்கு சந்திக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.

சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர்
பணிமனை,
இல. 59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி
பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்.

[சி/3081]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவையாம்

## பலாலியில் இராணுவத் தளபதி

கொழும்பு, ஆக. 25

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தின பலாலி இராணுவ முகாமில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

'இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு விரைவில் காணப்பட வேண்டும்.

'விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் அரசியல் தீர்வுக்கான பின்னணியை அமைக்கவே நாம் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம்.

வடக்கு-கிழக்கு மக்கள் எம்மோடு ஒத்துழைத்தால் அப்பின்னணியை விரைவில் ஏற்படுத்துவோம்.

இவ்வாறு அவர் சொன்னார்.

'எம்மிடம் போதிய படைப்பலமும், வளங்களும் இல்லை. இருந்திருப்பின் 72 மணி நேரத்துக்குள் எமது பணியை பூர்த்தி செய்து விடுவோம்'— என்றும் தளபதி வைத்தியரத்னா கூறினார்.

'கொப்பேகடுவவின் மறைவைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டனர் ஆனால் பாரிய தாக்குதல் ஒன்றை வெற்றிகரமாக நடத்தி விடுதலைப் புலிகளை அதிர்ச்சியடையச் செய்தோம். எமது படையினரின் மனவலிமை இன்னும் உறுதியாக உள்ளது' என்றும் அவர் சொன்னார். (த-எ)

# புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் அதிகரிப்பு!

## காங்கிரஸ் எம். எல். ஏ. குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் அதிகரித்துவிட்டது. விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டிலேயே இப்போது பயிற்சிபெற்று வருகின்றார்கள்;

தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவரும் இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏயுமான எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் முன்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே இவ்வாறு அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகள் தமிழகத்தில் இருந்து வெளிநாடுகளுடன் தொடர்புகொள்ளப் பயன்படுத்திய தொலைபேசி எண்களை பொலீஸாரிடம் தெரிவித்தும் கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜி. கே. மூப்பனாரும் கலந்து கொண்டார். (த-எ)

## புலிகளுடன் தொடர்பு; ஜெயலலிதா மறுக்கிறார்

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளத் தாம் முயற்சித்ததாகக் கூறப்பட்டும் குற்றச்சாட்டை முதலமைச்சர் ஜெயலலிதா மறுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது

''நாட்டின் பாதுகாப்பை முக்கியமாகக் கருதி தமிழகத்தில் இருந்து வன்முறைக் கலாசாரத்தைத் தாம் அடியோடு ஒழித்ததால விடுதலைப் புலிகளினால் தமிழ் நாட்டுக்கு ஏற்படவிருந்த பேராபாயத்தைத் தடுத்து நிறுத்த முடிந்தது'' — என்று செல்வி ஜெயலலிதா சென்னையில் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

1989 90 களில் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழகத்தில் ஊடுருவி சட்டம், ஒழுங்கைச் சீர் குலைத்தது என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-எ)

## தமிழ் நூல்களும் பரிசீலனைக்கு!

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் 1990 - 91இல் வெளியான தமிழ் நூல்களும் நடுவர்களின் பரிசிலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர் எஸ் எதிர்மன்னசிங்கம் தெரிவித்துள்ளார். (த-எ)

## உலர் உணவு விநியோகம்!

சுழிபுரம், ஆக 25

காரைநகர் மக்களுக்குரிய இம்மாத மிகுதி இரண்டு கட்ட இலவச உலர் உணவுப் பொருள்கள் கடந்த சனிக்கிழமை முதல் வழக்கம் பரையில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது. (த 28)

## எழுச்சிக்கூத்து

உடுவில், ஆக. 25

இன்றைய போர்க்கால சூழ்நிலையையும், மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் விளக்கும் ''எழுச்சிக் கூத்து'' ஒன்று விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் அண்மையில் உடுவில் பகுதியில் நடத்தப்பட்டது.

# மாதகலில் நிரந்தரத் தளம் அமைக்க ராணுவம் முயற்சி?

கொழும்பு, ஆக. 25

'ஒப்பரேஷன் பூமியதிர்ச்சி' யின் போது மாதகலில் கைப்பற்றப்பட்ட கடற் புலிகளின் முக்கிய பாரிய முகாமை நிரந்த இராணுவத்தளமாக மாற்றுவது குறித்து இராணுவ உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்படுவதாகத் தெரிகிறது.

இப்படி கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

மாதகலில் சுமார் 10 ஏக்கர் நிலத்தில் அமைந்திருந்த கடற்புலிகளின் முகாம் பல தரப்பட்ட வசதிகளைக் கொண்டது

கடற்கரையை ஒட்டியதாக, விசாலமான இடப்பரப்பில் உள்ள இம்முகாம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மிகப் பொருத்தமானது என்று கருதப்படுகிறதாம்.

இராணுவப் பயிற்சிக்கான வசதிகள், விளையாட்டு மைதானம், ஹெலிக்கொப்டர் தரையிறங்கக்கூடிய வசதி போன்றவை இங்கிருப்பதை உயரதிகாரிகள் கவனத்தில் கொண்டுள்ளனர்.

இராணுவத்தின் நிரந்தரத் தளமாக இம்முகாமை வைத்திருப்பது நல்லது என இந்த அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனராம்.

இப்படி அச்செய்தி தெரிவிக்கிறது. (த-எ)

# விசேட புலனாய்வு பிரிவு அரசு ஆரம்பிக்கும்!

அரசாங்கத்துக்கு எதிரான நாசவேலை, சதிமுயற்சி மற்றும் கிளர்ச்சிகளை முன்கூட்டியே கண்டறிய விசேட புலனாய்வு பிரிவு ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது;

மிகவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருவதாக கொழும்பு தமிழ் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (த-எ)


புதிய தொழில் பயிற்சி நெறிகள்

Computer - Basic
and
Radio, T. V. & Deck

ஆரம்பம்: 29 - 08 - 1992

★ சிறந்த விரிவுரைகள்
★ விசேட செய்முறைகள்
★ இலகு விளக்கங்கள்
★ துரித பயிற்சிகள்

விபரங்களுக்கு:
North Ceylon Technical Institute
14, St. Peter's Lane,
Hospital Road Jaffna.
(கி-3160)


# யாழ். நூலகத்தை எரித்தவர்களே ஈழப் போருக்கு வித்திட்டவர்கள்

## ஜனாதிபதி பிரேமதாஸா

கொழும்பு, ஆக. 25

யாழ்ப்பாணத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களைக் குழப்பியவர்கள் தான் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனை உருவாக்குவதற்குப் பொறுப்பானவர்கள். இவர்களாலேயே வடக்கு - கிழக்கு யுத்தம் தொடர்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாஸா முன்கண்டவாறு தெரிவித்தார்.

''எமது கட்சியின் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அபிவிருத்திச் சபை தேர்தல்களைக் குழப்பினர். மோசடி செய்வதற்காக வாக்குப் பெட்டிகளையே அவர்கள் தூக்கிச் சென்றனர்.

அதற்குப் பின்னர் அடாவடித்தனத்தில் இறங்கி பெறுமதிமிக்க யாழ் நூலகத்தை அவர்கள் கொளுத்தினார்கள். இந்த நூலகம் ஒரு தேசிய அநிதியமாகும். இத்தினத்தில் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வழிநடத்துவதற்காக திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் தோன்றினார்.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸா மேலும் தெரிவித்தார். (த-எ)


யாழ்ப்பாணக் கல்லூரி

இராணுவ நடவடிக்கையால் தடைப்பட்டிருந்த G A Q, B. A வகுப்புக்கள் மீண்டும் இன்று (25 08 92)முதல் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

- முதல்வர்.

(கி-3079)



உ

திருமண அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் ஆங்கீரஸ ஹு ஆவணி மாதம் 14 நாள் (30 - 08 - 1992) ஞாயிற்றுக்கிழமை காலை 7-21 தொடக்கம் 9 07 வரையுள்ள கன்னி லக்ன சுப முஹூர்த்தத்தில்,

எமது ஜ்யேஷ்ட புத்திரன் சிரஞ்ஜீவி குணேஸ்வர சர்மாவுக்கு

எமது புத்திரி சௌபாக்கியவதி சுகர்ணாவை

திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், சாவகச்சேரி துர்க்கையம்மன் தேவஸ்தானத்தில் நடைபெறும் மேற்படி வைபவத்துக்கு தாங்கள் குடும்ப சமேதராகச் சமுகம் தந்து, மணமக்களை ஆசிர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்;

ப. குகனேஸ்வர சர்மா குடும்பத்தினர், வரணி.

ந. சபாரத்தினக் குருக்கள் குடும்பத்தினர், சாவகச்சேரி.

வரவேற்பாளர்கள்: ச ஸ்ரீநந்தன சர்மா, ச [illegible]



ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனம்

செப்டம்பர் மாதக் கருத்தரங்குகள்

3ஆம் திகதி ''கிறிஸ்தவ இலக்கிய வரலாற்றில் தஞ்சை வேதநாயகர்''
வண. கலாநிதி எஸ். ஜெபநேசன்

17ஆம் திகதி ''விபுலானந்தரின் அறிவைச் செயற்பாடுகள்''
கலாநிதி சபா. ஜெயராசா

28ஆம் திகதி ''ஜேர்மன் ஒருமைப்பாடு 1989''
பேராசிரியர் சு. பாலசுந்தரம்பிள்ளை

கருத்தரங்குகள் மாலை 3-30 மணிக்கு ஆரம்பமாகும்.

- இயக்குனர்.

திருநெல்வேலி.

(கி-3080)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### புத்தகங்கள்

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நாமம் சொல்லுவோம் 18/-, இறைவன் திருநாமம் 18-/, சங்கீதம் வினா-விடை 24/- புத்தகங்கள் நல்லூர் ஆதீனம், பாலாஜி, அஷ்டலக்ஷ்மி ஸ்ரீகாந்த புத்தகக் கடைகளிலும் விற்பனையாகின்றன.
[22269]

### யந்திரம்

கண்ணூறு, நாவூறு நீங்கவும், வியாபார விருத்திக்கும், கல்வித்தடைகள், விவாகத் தடைகள் நீங்கவும் யந்திரங்கள் எம்மிடம் பெறலாம். ஸ்ரீசக்தி கணேச உபாசகர், ஸ்ரீமானவ சோதிட நிலையம், கைலாசபிள்ளையார்கோவில் சந்தி, நல்லூர். [22247]

### இலவச திருமண சேவை

31 வயது, மூலம், கிரகபாவம் 32, செவ்வாயற்ற ஆசிரியைக்கு மணமகன் தேவை. மத்திய கிழக்கு உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம். எமது சேவையை நாடுபவர்கள் ஞாயிறு காலையில் சந்திக்கலாம் அ. விமலா, நாச்சிமார்கோவிலடி.
[5270]

### பாட்டுப்பாடவா?

தமிழ் நாட்டரசு, சிறுவர் இலக்கியப் பண்ணை பயிற்சியாளர் கலைமாமணி கவியரசர் டாக்டர் இளங்கம்பன், இலங்கை செந்தமிழ் பாலர்களுக்காக இயற்றிய குழந்தைப் பாடல்கள் ரூபா 25/-. அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர்.

(5265-சி)

## சிசில், ஜெரி சில்வா வவுனியா விஜயம்: மக்களைச் சந்தித்தனர்

கொழும்பு, ஆக. 25

வவுனியாவுக்கு கடந்த ஞாயிறு காலை விஜயம்செய்த இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினா, வடமாகாணத் தளபதி ஜெரி சில்வா ஆகியோர் வடபகுதியில் இருந்து தாண்டிக்குளம் ஊடாக வவுனியா வந்து சேர்ந்த சுமார் 800 பயணிகளையும் வவுனியா-யாழ் வீதியில் உள்ள பிரவுண் கட்டடத்தில் வைத்துச் சந்தித்தனர். அச்சந்திப்பு மூன்று மணி நேரம் நீடித்தது.

[த-எ]

## நடவடிக்கை எடுக்கும்!

கொழும்பு, ஆக. 25

பத்திரிகையாளர்கள் — எந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்காக வாதாடவும் பத்திரிகையாளர் சங்கம் நடவடிக்கை எடுக்கும் என அச்சங்கத்தின் தலைவரும் லக்திவ பத்திரிகை ஆசிரியருமான வினி ஹெற்றிகொட தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தில் கடமையாற்றும் தயான் ஜயதிலக்க தாக்கப்பட்டது குறித்து பத்திரிகையாளர் என்றவகையில் நடவடிக்கை எடுப்பீர்களா எனக் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

[த-10]

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி

**சத்தியபாமா விஸ்வலிங்கம்**

(முன்னை நாள் ஹற்றன் நஷனல் வங்கி உத்தியோகத்தர்)

தோற்றம்: 03 — 02 — 1956
மறைவு: 25 — 08 — 1986

ஆண்டாறு மறைந்தாலும் மறப்போமா குலவிளக்கை
ஆண்டவையாம் ஆதித்த குமரனையே மடைவேனென்று
பூண்டபிரதிக்ஞை பூர்த்தி செய விரைந்தாயம்மா
மாண்டசீர் மகிமையெலாம் மகிதலத்தில் மலர்ந்திடவே.

உங்கள் பிரிவால் என்றும் துயருறும்:

பெற்றோர், சகோதர, சகோதரிகள், அத்தான்மார், பெறாமக்கள், அத்தை, அண்ணா, சுற்றத்தவர்.

'யமுனா', ஆனைக்கோட்டை. [22255]

## கேள்விப்பத்திர அறிவித்தல்

**பாவனைக்குகந்த இரண்டாம் தர (2nd hand) மோட்டார் சைக்கிள்கள்/ ஸ்கூட்டர்கள் கொள்வனவு**

யாழ் பல்கலைக்கழகத்திற்கு, பாவனைக்குகந்த இரண்டாம் தர மோட்டார் சைக்கிள்கள்/ ஸ்கூட்டர்கள் இரண்டு கொள்வனவு செய்வதற்காக அதன் உரிமையாளர்களிடம் இருந்து கறுவிலைகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்போர் அதன் விலையையும், கீழ்க்குறிப்பிடும் விபரங்களையும் விபரமாக எழுதி நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 09-09-1992 காலை 9 30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.

மோட்டார் சைக்கிள்/ ஸ்கூட்டர் இனம்- [Model]
என்ஜின் வகை (Engine Type)
ஆகக்கூடிய வேகம் [Maximum Speed]
எண்ணெய் வகை [Lubrication]

விண்ணப்பதாரிகள் உரிய ஆவணங்களையும், வாகனத்தையும் தேவைப்படும் பட்சத்தில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் பார்வையிடக்கூடிய முறையில், சமர்ப்பிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவ கடித இடதுபக்க மேல்மூலையில் ''இரண்டாம்தர மோட்டார் சைக்கிள்/ ஸ்கூட்டர் கொள்வனவிற்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 09-09-92 காலை 10-00 மணிக்கு பல்கலைக்கழக சபைமண்டபத்தில் திறக்கப்படும்.

-பதிவாளர்.
யாழ் பல்கலைக்கழகம்.
(சி-3078)

## 2ஆம் வருட நினைவஞ்சலி

25 — 08 — 1992



ஆண்டவன் படைப்பில்: 10 — 08 — 1950
ஆண்டவன் அடியில்: 25 — 08 — 1990

ஆண்டு இரண்டே அன்றாலும்
அன்பை மறக்க முடியாமல்
ஈண்டும் நினைவுகள் மாறாமல்
இன்றும் நாங்கள் தவிக்கின்றோம்
நன்றே இறைவன் விண்ணரசில்
நலமாய் நீர் வாழுவதை
என்றும் நாங்கள் நம்புகின்றோம்
எனினும் தொடர்ந்து வேண்டுகிறோம்.


பாசமுடன் நினைத்திருக்கும்;

அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள், மைத்துனர்மார், மச்சான்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

3ஆம் வட்டாரம், மண்டைதீவு. [22290]

"பசுமையான பாச நினைவுகளுடன்"

## 13ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கார்த்திகேசு வைத்தியலிங்கம்**

(உரிமையாளர்: வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம்.)

தோற்றம்: 17-07-1913
மறைவு: 20-08-1979

திதி: 25-08 1992

அன்பெல்லாம் நீர் சொரிந்து
ஆதரவாய் வழி காட்டி;
அப்பாவே நீர் எம்மை
ஆண்டாண்டாய்க் காத்து நின்றீர்!
ஆண்டு பல சென்றதினால்,
ஆறிடுமோ உம் துயரம்?
ஆவலுடன் உம் புகழை
அப்பாவே காத்து நிற்போம்!
ஆண்டவனின் திருவடியில்,
அவ்வுலகில் நீர் நின்று;
அன்புடனே எஞ்ஞான்றும்
ஆதரிப்பீர் நீர் எம்மை.

உங்கள் நினைவில் வாழும்;

அன்பு மனைவி, ஆருயிர்ச் செல்வங்கள், அன்பு மருமக்கள், ஆசைப் பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

110, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [22280]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15 — 05 — 1931
உதிர்வு: 27 — 08 — 1989

ஸ்ரீமான்

**கிருஷ்ணசாமி ஆனந்தசுந்தரம்**

(ஓய்வுபெற்ற D.O.A. கட்டடத்திணைக்களம், யாழ்ப்பாணம்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! அப்பா
உங்கள் நினைவால் உள்ளம் வாடுகின்றோம்
கந்தனின் திருவிழா காணுமிவ் வேளையில்
கண்கள் குளமாகுதையா உம்மை நினைக்கையிலே
மூவாண்டு கடந்த போது, உம் இனிய நினைவு
நீங்காத நிழலாக நெஞ்சத்திலாடுது அப்பா!

உங்கள் பிரிவால் வாடும்:

அன்பு மனைவி, பாசமிக்க பிள்ளைகள், அன்புப் பேர்த்தி, அருமைச் சகோதரர்கள், மாமா, மாமி, மருமக்கள், மைத்துனர், அயலவர், உற்றார், உறவினர்கள்.

கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் (5269)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனோ வலிமை இன்றைய தேவை

வலிகாமம் - வடக்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களில் கடந்த வாரத்தின் மூன்று நாட்களில் அரசாங்கப் படைகள் நடத்திய வான், கடல், தரை வழித் தாக்குதல்களால் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

தமது உயிரை மட்டும் காப்பாற்றும் ஒரே நோக்குடன், படைகளின் பிடியில் அகப்பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்துடன் அவர்கள் தமது வீடுகளையும், உடைமைகளையும் இழந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இராணுவத்தின் பிடியில் அகப்பட்டால், அல்லது அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் தங்க நேர்ந்தால், தமக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்காகவே மக்கள் இவ்வாறு நிர்க்கதியான நிலைக்கு ஆளாகிறார்கள்.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. அதேபோல குடிசையாக இருந்தாலும் கொட்டிலாக இருந்தாலும் ஒவ்வொருவருக்கும் தத்தமது இல்லமே சொர்க்கம். பட்டினி கிடந்தாலும் தனது வீட்டில் படுத்துறங்குவது போன்ற நிம்மதியும், சுதந்திரமும் மற்றவர் வீட்டில் அல்லது அகதி முகாமில் கிடைக்காது. எனினும் அதனையும் பொருட்படுத்தாமல் இராணுவம் வருகிறது என்று கேள்விப்படும் மாத்திரத்தே தப்பி விடுகின்றனர்.

இது இராணுவத் தரப்பாருக்கும் அவர்கள் மூலமாக அரசாங்கத்துக்கும் தெரியும். அப்படியிருக்க, தமிழ்ப் பகுதிகளை இராணுவக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது மக்களைக் காப்பாற்றவும், சிவில் நிர்வாகத்தை உண்டாக்கவுமே என்று அரசாங்க அமைச்சர்களும் அதிகாரிகளும் சப்புக் கட்டுகிறார்கள்!

ஆனால் இராணுவத்தினர் தமிழ்ப் பிரதேசங்களைக் கைப்பற்றுவது என்று கூறுவது அர்த்தமற்றது. மக்கள் இல்லாத வெறும் மண்ணைப் பிடிப்பதால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை என்பதை அவர்கள் உணரவில்லையா? அதனைப் புரிந்து கொண்டாற்கூட, அவர்கள் தமிழ்ப் பகுதிகளை பிடிக்கப் படாதபாடு படுவது தமிழ் மக்களின் சொத்துக்களைச் சூறையாடவும், வீடுகள் மற்றும் தொழிற் கூடங்கள், தோட்டங்களை நாசமாக்கவுமே.

குண்டு வீச்சு, ஷெல் வீச்சு, பீரங்கித் தாக்கு என்பனவற்றின் மூலம் எப்படித் தமிழ் மக்களைக் கொன்றொழிக்கிறார்களோ, அவ்வாறே தமிழ் பகுதிகளுக்குள் உட்புகுவதால் தமிழ்ப் பிரதேசத்தை நிர்மூலமாக்கி அவர்களின் எதிர்காலத்தை சூன்யமாக்கிவிட முயற்சிக்கிறார்கள்.

இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தம்மை அர்பணித்துள்ள போராளிகளுக்கு முழு ஆதரவையும் மக்கள் வழங்க வேண்டும். இராணுவம் ஏனைய பகுதிகளுக்கு முன்னேறாது தடுப்பதற்கு போராளிகளுக்குப் பக்கத் துணையாக இருக்கவேண்டும். முன்னேறிய இடங்களிலிருந்து விரட்டுவதற்கு ஒத்தாசை புரியவேண்டும். இராணுவம் சிறிது தூரம் முன்னேறியது கண்டு மனோபலத்தை இழந்துவிடக்கூடாது. போராளிகளும் மனிதர்கள்தான். மக்களின் மைந்தர்களே. அவர்களுக்குள்ள மனோபலம் ஏன் மக்களுக்கு வரக்கூடாது? தமிழர்கள் தமது மனோவலிமையை இழந்துவிட்டால் அதுவே இராணுவத்துக்கும் கிடைக்கும் வெற்றியாகிவிடும். அது தமிழர் வாழ்வின் சூன்ய நிலையாகிவிடும். இதனை எந்த நெருக்கடியிலும் மறந்துவிடக்கூடாது.

# மீளாய்வு செய்யப்பட்ட வெட்டுப்புள்ளி விவரம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 25

1990 - 1991 ஆம் கல்வியாண்டுக்குரிய பல்கலைக் கழக அனுமதிக்கான — மீளாய்வு செய்யப்பட்ட — பல்கலைக் கழக வெட்டுப்புள்ளி விவரங்களை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு வெளியிட்டிருக்கிறது. தமிழ் மாவட்டங்களுக்குரிய வெட்டுப்புள்ளி விவரம் வருமாறு:-

| மாவட்டம் | பரீட்சை இல. | மருத்துவம் | பல் வைத்தியம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உயிரியல் விஞ்ஞானம் | பொறியியல் I | பொறியியல் II | பௌதிக விஞ்ஞானம் | முகாமைத்துவம் | வர்த்தகம் | சட்டம் | கலை | கட்டடக் கலை | நகரக்கட்டுப்பாட்டு ஆராய்வு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1 | | | | | | | | | | | | 254 | | |
| | 2 | 267 | 264 | 257 | 249 | 235 | 285 | 278 | 226 | 292 | 277 | 267 | 246 | 190 | 271 |
| கிளிநொச்சி | 1 | | | | | | | | | | | | | | |
| | 2 | 211 | 207 | 188 | 189 | 182 | 285 | ★ | 183 | 259 | 246 | 237 | 246 | ★ | ★ |
| மன்னார் | 1 | | | | | | | | | | | | 259 | | |
| | 2 | 198 | 196 | 190 | 183 | 182 | 184 | ★ | ★ | 245 | 226 | 226 | 226 | ★ | ★ |
| முல்லைத்தீவு | 1 | | | | | | | | | | | | | | |
| | 2 | 213 | 198 | 194 | 182 | 194 | 262 | 254 | 183 | 265 | 253 | ★ | 245 | ★ | 234 |
| வவுனியா | 1 | | | | | | | | | | | | 246 | | |
| | 2 | 196 | 194 | 190 | 189 | 180 | 183 | ★ | ★ | 277 | 259 | 231 | 238 | ★ | ★ |
| திருகோணமலை | 1 | 234 | | | 198 | 189 | 226 | | 194 | 256 | 241 | 237 | 225 | | |
| | 2 | 235 | 229 | 227 | 215 | 195 | 256 | 252 | 202 | 275 | 250 | 261 | 224 | ★ | 233 |
| மட்டக்களப்பு | 1 | 262 | | | | 198 | | | 185 | 261 | 259 | | 255 | | |
| | 2 | 258 | 254 | 250 | 236 | 219 | 255 | 251 | 187 | 286 | 267 | 252 | 246 | ★ | 244 |
| கொழும்பு | 1 | 272 | 268 | 264 | 251 | 238 | 263 | 254 | 198 | 278 | 260 | 262 | 231 | 203 | 248 |
| | 2 | | | | | | | | | | | | | | |

பரீட்சை 1 — 1990 ஆகஸ்டில் நடைபெற்றது.
பரீட்சை 2 — 1991 ஏப்ரலில் நடாத்தப்பட்டது.
★ தகுதி பெற்றவர் எவரும் இல்லை.

## அதிவிசேட திறமைச் சித்தி

லண்டன், ஆக. 25

லண்டன் ஹேர்ட்வோர்ட்ஷயர் பல்கலைக்கழகத்தின் பொறியியல் மாணி இறுதியாண்டுப் பரீட்சையில் உரும்பராயைச் சேர்ந்த துரைசாமி குசலகுமார் முதலாம் வகுப்பில் அதிவிசேட திறமைச் சித்தியடைந்தார்.

இவர் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். (த)

## வீதிக்கும் "கொப்பே"யின் பெயர்

கொழும்பு, ரோஸ்மீட் பிளேஸுக்கு லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மாவத்தை என்று பெயரிடுமாறு கொழும்பு மாநகர சபைக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

அல்ஹஜ் அஷ்ரப் ஹுசைன் என்பவரைத் தலைவராகக் கொண்ட முஸ்லிம் இளைஞர் சங்க (வை. எம். எம். ஏ) அசெம்பிளி இக்கோரிக்கையை விடுத்திருக்கிறது.

## அமெரிக்காவில் கடும் புயல்

லண்டன், ஆக. 25

அமெரிக்காவின் கடற்கரை உல்லாச நகரமான மியாமியில் நேற்றுக்காலை வீசிய கடும் புயற்காற்றினால் அங்கு பெருத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. (உ-10)

## புலமைப் பரிசில் பரீட்சை குடாநாட்டில் நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஆக. 25

குடாநாட்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை குழப்பம் எதுவுமின்றி நடை பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவில் விசேடமாக அமைக்கப்பட்ட புதிய நிலையங்களிலும் பரீட்சை நடைபெற்றது.

ஆயினும் இடம்பெயர்ந்த நிலையில் பல சிறுவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

## பண்டாரநாயக்க குடும்பம் வெளியேற்றப்படும்!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பண்டாரநாயக்காக்களின் தலைமைப் பதவிப் போட்டி தொடர்ந்தால், பண்டாரநாயக்காக்களை வெளியேற்றிவிட்டு, வெளியாருக்குத் தலைமைப் பதவியை வழங்க வேண்டி ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

பலாங்கொடையில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவாளர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (த-எ)

## நஜிபுல்லாவை ஒப்படைக்க ஐ. நாவிடம் கோரிக்கை

காபூல், ஆக. 25

ஆப்கனிஸ்தான தலைநகர் காபூலில் உள்ள ஐ. நா. அலுவலகத்தில் தஞ்சம் புகுந்துள்ள முன்னாள் ஜனாதிபதி நஜிபுல்லாவை தம்மிடம் ஒப்படைக்கும்படி ஆப்கன் அரசாங்கம் ஐ. நா. ஸ்தாபனத்தைக் கோரியுள்ளது.

ஆப்கன் வெளியுறவு அமைச்சர் லத்திப், ஐ. நாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

நஜிபுல்லா தமது ஆட்சிக்காலத்தில் விட்ட தவறுகளை விசாரித்து அவருக்கு தண்டனை வழங்க அவர் தேவைப்படுவதாகவும் ஆப்கன் அரசு ஐ. நாவுக்கு அறிவித்துள்ளது. (உ-எ)

நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### கையறுந்த நிலையிதனைக் காண்

அரக்கர் குலத்தை அடக்கி அவர்தமையும் புரக்க என வந்த புங்கவா, — சூரரவேல் கரத்தேந்தி நிற்கும் கந்தா, நின்பாதம் சிரத்தே வைத் தோமிடர் தீர்

★ ★ ★

நல்லைப் பதியுள் நாற்கோ புரமதிலுன் தொல்லை தவிர்த்திருத்தல் தோழமையா? — வல்லை! மெய்யன்பர் தாமும் மிகநொந்தார் வான்பொழிவால், கையறுந்த நி[illegible]

— [illegible]

## தேவாலயத்தில் குண்டு

வத்திக்கான், ஆக. 25

பிலிப்பைன்ஸின் வடபகுதியில் உள்ள மின்டனாவோ தீவில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் நேற்று ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்தில் 4 பேர் கொல்லப்பட்டனர். 12 பேர் காயமுற்றனர்.

தேவாலயத்தின் முன்னால் உள்ள பெரிய சிலுவையின் அடியில் மக்கள் காணிக்கை செலுத்திக்கொண்டிருந்த சமயம் குண்டு வெடித்தது. இத்தீவில் கடந்த 4 மாதங்களில் தேவாலயம் ஒன்றில் குண்டு வெடிப்பு இடம்பெற்றது இது இரண்டாவது தடவையாகும். (உ-10)

## நல்லூரில் இன்று

கொழும்புத்துறை, ஆக. 25

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் 23 ஆம் திருவிழாவான இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5மணிக்கு சப்பறத் திருவிழா நடைபெறும்.

இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்)— காவ்யதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் 'சூரன் போர்'' என்ற பொருளில் கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2-00 மணிக்கு— கந்தபுராணப் படிப்பு. பிற்பகல் 3-00 மணிக்கு — பௌராணிகர் மு. தியாகராசாவின் "முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை.

★ நல்லூர் கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப்பந்தலில் கே. எம். பஞ்சாபிகேசன், எம். பி. நாகேந்திரன் குழுவினரின் மங்கள இசை.

★ யாழ்ப்பாணசயில் ஆதாரவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை 6.35 மணி தொடக்கம் — கீழைத்தேச இசைவிழா. (உ-30)

## சமய அறிவுப் போட்டி

கொழும்புத்துறை, ஆக. 25

நல்லூர் முருகன் சனசமூக நிலையம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இவ்வருடமும் சமய அறிவுப் போட்டிகளை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது. (த-30)

## சிங்கை மந்திரி ராஜினாமா!

சிங்கப்பூர், ஆக. 25

சிங்கப்பூர் அரசாங்கத்தில் தேசிய அபிவிருத்துறை அமைச்சர் சுப்பையா தனபாலன் அடுத்த மாதம் முதல் பதவி விலகுகின்றார்.

அவரது ராஜினாமாக் கடிதத்தை பிரதமர் ஏற்றுக் கொண்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருளம்பலம் அன்னம்மா

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி அருளம்பலம் அன்னம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி அருளம்பலத்தின் (சிறாப்பர், மேர்க்கன்டைல் வங்கி, காலி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, ஆறுமுகம், இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25 - 08 - 92) காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சதானந்தன்.
(மருமகன்)
(சரஸ்வதி அரிசி ஆலை)

21/3, புகையிரத வீதி,
கொக்குவில் - கிழக்கு.
(22301)

### அப்புக்குட்டி சிவலிங்கம்

சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சுருட்டுத் தொழிலதிபர் வேலுப்பிள்ளை அப்புக்குட்டியின் மகன் அப்புக்குட்டி சிவலிங்கம் நேற்றுக் காலமானார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சசிலதாவின் அன்புத் தந்தையுமாவார்.

இவரது மரணச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
எம். பி. சிவபாதசுந்தரம்
(கிராமசேவையாளர்)

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
(22292

### திருமதி கண்மணி வயித்திலிங்கம்

மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி செட்டிய குறிச்சியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி வயித்திலிங்கம் 24 - 8 - 92 ஆம் திகதி காலமானார்.

இவர் மீசாலை தெற்கு காலஞ்சென்ற தம்பு வள்ளியம்மை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற ஏரம்பர் வயித்திலிங்கத்தின் மனைவியும், அச்சுவேலி செட்டிய குறிச்சியை வதிவிடமாகக் கொண்டவர்களான இளைப்பாறிய ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் பேரம்பலம், தில்லைநாயகியம்மை ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்றவர்களாகிய மனோரமணி (பாக்கியம்), வேலும் மயிலும் (ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும், கணேசமூர்த்தி (புறாணை — VRUIEI), மகேஸ்வரமூர்த்தி (கொழும்பு), சிவசக்தி (கொழும்பு), சிவகணேசமூர்த்தி (FRANCE), உதித்திரன், யோகேஸ்வன், வசந்தேஸ்வரன், புவனேஸ்வரன், உரித்திரராணி, விமலராணி, வசந்தராணி ஆகியோரின் பேர்த்தியாரும், —

கனகாம்பிகை (VRUIEI), கணேசராசா (கொழும்பு), பாமரதி, சாந்தினி, சகுந்தலாதேவி, சித்திரா, கிரிஷாந்தினி, தீபா, குலேந்திரநாயகம் (G S அச்சுவேலி வடக்கு), பாஸ்கரமகாராசா (T. O., வலி. கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம்), யோகராசா ஆகியோரின் பேர்த்தியாரும், கார்த்திகா, டுஷ்யந்தன், சஞ்சீபன், மயூரினி, கணாதிபன், குலதேவி, சுஜன், குலராம், தனுஷா, பானுஷா, வேனுஷா, தேனுஷா, கேதாரன், டகீதா, துஷந்தி ஆகியோரின் பூட்டியும், தம்பிப்பிள்ளை, காலம் சென்றவர்களான பொன்னம்பலம், நல்லம்மா, சபாவதிப்பிள்ளை, நாகலிங்கம், சதாசிவம், உமையம்மை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24 - 8 - 92 ஆம் திகதி ஆவரங்கால் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தயவாக வேண்டப்படுகின்றனர்.

தகவல்;
வ. பேரம்பலம்
(மகன்)

''மனோபலம்''
செட்டிய குறிச்சி,
அச்சுவேலி
(22288)

### செல்லையா ஐயாத்துரை

செல்லையா ஐயாத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) 24 - 8 - 92 அன்று அதிகாலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சத்தியலட்சுமியின் அன்புக் கணவரும், தங்கேஸ்வரன் (இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), ஜெகதாம்பாள், தயாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேஸ்வரி (இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) ஜெயகிருஸ்ணன் (Hayley's Ltd Colombo), ஜெயமுகுந்தன் (Associated Cables Ltd. Colombo), ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராமி, சங்கீதா, பிரியாந்தன் சாந்தி, சர்மிலா, டிலுக்ஷணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (24 - 8 - 92) திங்கட்கிழமை மாலை 4 00 மணியளவில் அன்னசத்திர வீதி, கந்தர்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம்செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
ஐ. தங்கேஸ்வரன்

53, அன்னசத்திர வீதி,
கந்தர்மடம்.
(22289)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 192/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பலாலிக்கு செஞ்சிலுவைக் குழு

யாழ்ப்பாணம், ஆக. 25

பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களைக் கவனிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் பலாலிக்கு சென்றுள்ளனர். அவர்கள் நாளை யாழ்ப்பாணம் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-3)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 25

ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்ட விவரம் வருமாறு:-

★ சென் அன்ரனீஸ் எதிர் சென் மைக்கல்

★ தீவக நட்சத்திரம் எதிர் றோயல்

★ ஞானகலா எதிர் விநாயகர்

★ ★ ★

யாழ் மடம் வீதி திருவள்ளுவர் சன சமூக நிலையம் நடத்தும் அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் நினைவு உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களின் விவரம்:

★ கொய்யாத் தோட்டம் வி. க. அணி எதிர் திருநகர் வி. க. அணி

★ அன்ரனீஸ் வி. க. அணி எதிர் சென் மேரீஸ் வி. க. அணி

(த-51)

## தொண்டர் சேவை

கொழும்புத்துறை, ஆக. 25

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் அனுசரணையுடன் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்று வரும் தொண்டர் சேவை தேர், தீர்த்தம், பூங்காவனம் ஆகிய விசேட தினங்களில் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இச் சேவையில் பங்கு கொள்ள விரும்பும் இந்து இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகள் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் செயல்பட்டு வரும் பேரவைக் காரியாலயத்தில் தங்கள் விவரங்களைப் பதிந்து தொண்டர் சேவைப் பணியில் இணைந்துகொள்ளுமாறு பேரவை கேட்டுள்ளது.

(உ-30)

## செஞ்சோலை இசைமாலை

யாழ்ப்பாணம், ஆக. 25

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று செவ்வாய் மாலை நடைபெறவிருந்த செஞ்சோலை இசை நிகழ்ச்சி எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8-30 மணிக்கு நடைபெறும் என செஞ்சோலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(த-5)

## கொள்ளை

கொழும்பு, ஆக. 25

கொழும்பு கொடிகாவத்தை பெற்றோல் நிலையத்தில் இருந்து நேற்றுக் காலை 2 லட்சத்து 26 ஆயிரம் ரூபாவுக்கும் கூடுதலான பணத்தை ஆயுதம் தரித்த இருவர் கொள்ளையிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

## தெரிவுப்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையில் 21 பரீட்சை நிலையங்களில் மூவாயிரத்து 150 பேர் தோற்றுகிறார்கள்.

முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பரீட்சை நிலையம் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

(உ-3-162)

## பல்கலைக்கழக அனுமதி:
# மேன் முறையீடு செய்ய சபை நியமனம்!

கொழும்பு, ஆக. 25

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளவர்கள் தங்களது தெரிவுகள் பற்றி மேன்முறையீடு செய்வதற்கென ஒரு சபை நியமிக்கப்பட்டுள்ளது.

அனுமதி பெற்றவர்களின் பெயர் விவரங்கள், புள்ளிகள் யாவும் எல்லாப் பல்கலைக்கழகங்களின் பதிவாளர்களிடமும் உள்ளன என்றும் — அவற்றைப் பார்வையிட்ட பின்னர் ஏதாவது முறைப்பாடுகள் இருந்தால் இந்தச் சபையிடம் மேன்முறையீடு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா பத்மநாதன் (துரைராசா)

யாழ்ப்பாணம், நல்லூர் நாயன்மார்கட்டை பிறப்பிடமாக கொண்டவரும் காரைநகர் வேம்படியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா பத்மநாதன் 24-08-92 இல் காலமாகிவிட்டார்.

இவர் திரவியத்தின் அன்புக் கணவரும், இரசமணி, சபாநாதன், கார்த்திகாயினி, சிவநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், S. R. சோமசுந்தரம் (சோமாஸ், வேம்படி, காரைநகர்-தங்கொடுவ), கதிரவேலு (சித்தி விநாயகர் ஸ்ரோஸ், பரந்தன்) பிரேமரஞ்சினி (மெமோறியல் கல்லூரி, மானிப்பாய்), லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும், கமலநாதன், காலஞ்சென்ற பாலச்சந்திரன், நந்தினி, சுகந்தினி, பவானி, சுதாகரன், சுமதி, சுபாகரன், சுபோதினி, தனலக்சுமி, கணநாதன், சேந்தன், முகுந்தன், ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற அன்னபூரணம், காலஞ்சென்ற அன்னலக்சுமி பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (ஓவசியர்), தருமராசா (ஓவசியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25-08-1992) நண்பகல் 1 00 மணியளவில் இல 39, பிறவுன் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. சிவநாதன்
(மகன்)

காரைநகர்.
(22302)

### தில்லையம்பலம் சின்னையா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய மலாயன் பென்சனர் திருவாளர் தில்லையம்பலம் சின்னையா அவர்கள் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், வித்தியாமலர், பத்மராணி, சிவராணி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம் (நெல்சந்தைப்படுத்தும் சபை - வவுனியா), செல்வரத்தினம் (இறைவரித் திணைக்களம் - கொழும்பு), புஸ்பராசா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகிதா, பிரசன்னா, கங்கா, ஸஜிதா, துஜித்திரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 21- 08- 92ல் சங்கானையில் தகனம் செய்யப்பட்டது.

இத் தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்கிறோம்.

தகவல்:
திருமதி சு. வித்தியாமலர்

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.
(22291)

### வைத்திலிங்கம் இராசரத்தினம்

(இளைப்பாறிய புகையிரதத் தலைமைப் பாதுகாவலர்)

மானிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், 4ம் கட்டை கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராசரத்தினம் அவர்கள் 24- 08- 92 அன்று காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் வீரவாகு, இராசம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், லோகேஸ்வரன், Dr லோகேந்திரன் (பொறியிலாளர், அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், வாணி, வேணி, வதனி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25- 08- 92 இன்று அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 1 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இருபாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. லோகேஸ்வரன்
(மகன்)

(22300)

### ஆறுமுகம் வைத்திலிங்கம்

24 - 08 - 1992 ஆம் திகதி அறிவித்தலின்படி நெடுந்தீவு மேற்குப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் வைத்திலிங்கம் 23 - 08 - 92 இல், அரியாலையில் காலமானார்.

இவரின் ஈமக்கிரியைகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தகவல்:
சு. குமாரசுவாமி

260, ஆனந்தம் வடலி வீதி,
அரியாலை.
(22299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org